**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 18.11.2025**

**OS. No.92/2023**

**வழக்கு சாட்சி PW.1–அஜித் , த/பெ. கோவிந்தராசு**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எங்களுடைய இடத்தில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட விடாததால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது . நான் சென்னையில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான் . இந்த வழக்கு தாவா இடத்தில் தற்போது நான் குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை . தாவா இடத்தை சந்திரசேகர் என்பவரிடம் கிரையம் பெற்றேன் . நான் கிரையம் வாங்கிய தாவா சொத்தின் சர்வே எண் தற்போது எனக்கு நினைவில்லை . நான் கிரையம் வாங்கிய சொத்து 1100 சொச்சம் சதுரடி நிலம் ஆகும் . தாவா சொத்தின் மேற்கு பக்கம் பிரதிவாதி ராஜகோபால் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.1 நான் சந்திரசேகரிடம் கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தின் நகல் என்றால் சரிதான் . தாவா சொத்து கிரையம் வாங்கிய தேதி எனக்கு நினைவில்லை , ஆனால் கிரையம் வாங்கி சுமார் இரண்டறை வருடங்களுக்கு மேல் இருக்கும் . நான் கிரையம் வாங்கிய சொத்து தொடர்புடைய ஆவணங்கள் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை. அத்தகைய ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில்லை.

தாவா சொத்தில் உள்ள வீட்டின் மாடியில் ராஜகோபால் வசித்து வருகிறார் என்றால் ஒரே கட்டிட அமைப்பை இரண்டாக பிரித்து அதில் ஒரு பாகத்தை கிரையம் வாங்கியுள்ளேன் , இரண்டு பாகத்திலும் மாடி போர்சன் உள்ளது , அவரது பாகத்தில் ராஜகோபால் வசித்து வருகிறார் . தரைத்தளம் மட்டும்தான் கிரையமாக நான் வாங்கியுள்ளேன் என்றாலும் மாடி போர்சன் எதுவும் நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.1 ஆவணத்தில் 9 வது பக்கத்தில் கட்டிட பரப்பளவு என்ற குறிப்பில் தரைத்தளம் 27.88 செண்டிமீட்டர் என்று குறிப்பிட்டு அதற்கு கீழ் ஒன்றாவது மாடி இல்லை என குறிப்பு உள்ளது என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும கிரையப்பத்திரத்தில் பக்கம் 7 ல் " மேற்படி மனையிடத்தில் கீழமேல் அடி 10 x 30 = 300 சதுரடிக்கு "என்ற விபரம் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மாடிப்பகுதி எனக்க விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பு

எதுவும் இல்லை என்றால் சரியல்ல . அத்தகைய விபரங்கள் எதுவும் கிரையப்பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றாலும் பிரதிவாதி சொத்தை அபகரிக்கவேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிராதில் பிரதிவாதி எனது இடத்தில் எந்தப்பகுதியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல , சொல்லியுள்ளேன், முன்னாடியும், பின்னாடியும் சுவர் எழுப்ப தடை ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன். பிராதில் எந்த இடத்தில் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் பொதுவாக அதைக்குறிப்பிட்டுள்ளேன்.

சந்திரசேகர் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . அத்தகைய கிரைய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவ்வாறு நான் தாக்கல் செய்திருந்தால் பிரதிவாதி ராஜகோபால் குடியிருந்து வரும் நிலம் எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்ற விபரம் நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . பிரதிவாதி மீது நான் புகார் கொடுத்ததாக பிராதில் சொல்லியுள்ள நிலையில் அந்த புகாரோ , காவல்நிலையத்தில் வழங்கப்பட்ட இரசீதோ இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . தாவா சொத்தின் மாடியில் பிரதிவாதி குடியிருந்து வருவதால் தாவா சொத்தில் அவர் நுழையக்கூடாதென உறுத்துக்கட்டளை பரிகாரம் நான் கோர இயலாது என்றால் சரியல்ல. சொத்தினை மீட்டுத்தர சொல்லி பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.18 15:56:31 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.